# Summaries in Tamil

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கான உளசமூக தலையீடுகள்: இப்பகுதியின் தற்போதய நிலை**

இந்த கட்டுரையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கான உளசமூக அனுசரணை என்னும் பகுதி மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. இரண்டு பிரதான தலையீடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன: சிகிச்சைரீதியான அணுகுமுறை, அபிவிருத்திரீதியான அணுகுமுறை. இந்த ஒவ்வொரு அணுகுமுறைகளினதும் பயன்பாடுகள் ஆராயப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்கதங்கள்:** பாதுகாப்பு காரணிகள், உளசமூக நன்னிலை, சமூக உள்ளடக்கங்கள், சிகிச்சைரீதியான அணுகுமுறை, அபிவிருத்திரீதியான அணுகுமுறை

---

**நடைமுறைகளில் ஏகமனதான முறையின் பயன்பாடு. போராட்டக் குழுக்களுடன் தொடர்புடைய சிறார்களுடனான இடையீடுகளின் அபிவிருத்தியில் உள்ள சந்தேகங்கள்**

தொழில் புரிபவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் முன்னைய சிறுவர் போராளிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பாகப் பெருகிவரும் அனுபவங்களிலிருந்து எவ்வாறு கற்றுக்கொள்ளலாம்? இந்தச் சுருக்கமான அறிக்கை, குறிப்பிட்ட துறையில் கைதேர்ந்தவர்களின் கருத்துக்களைக் கைப்பற்றுவதற்கான ஓர் உதாரணமாக ஏகமனதான முறையைக் காட்டியுள்ளது. இதன் பலனாக, சில ஆராய்ச்சிகளுக்கான முன்னுரிமைத் துறைகளும், நடைமுறைகளின் அபிவிருத்தி முறைகளும் இனங்காணப்பட்டுள்ளன:- முன்னர் யுத்தக் குழுக்களுடன் தொடர்புகொண்டிருந்த பெண் பிள்ளைகளை மீழிணைத்தல், மேம்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு யுக்திகள் மற்றும் சமூக மட்டத்திலான உளசமூக, சிகிச்சை இடையீடுகளின் ஒப்பீட்டளவிலான செயற்றிறனை ஆவணப்படுத்தல் போன்றன ஆகும்.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் போராளிகள், ஏகமனதான முறை, மீழிணைத்தல்

---

**லிபேரியாவிலுள்ள உளசமூக தலையீடுகளுக்கான கணிப்பீடுகள்.**

இந்தக் கட்டுரையில் யுத்தம் மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களை இலக்குவைத்து நடாத்தப்பட்ட இரண்டு உளசமூக தலையீடுகளின் முறையியல் மற்றும் விளைவுகளின் வினைத்திறன் பற்றி நடாத்தப்பட்ட கற்கையானது அளிக்கை செய்யப்படுகின்றது. ஒரு தலையீடானது உளவளத்துணையை வழங்கியதோடு மற்றய தலையீடு ஆதரவுக்குழுக்களையும் திறன்சார் பயிற்சிகளையும் வழங்கியது. தரரீதியான ஆராய்ச்சிகள் இரண்டு தலையீடுகளினூடாகவும் அளிக்கப்பட்ட உதவிகள் பற்றி நேரான கருத்துக்களையே சொன்னதாக சொல்கின்றது. தரரீதியான ஆராய்ச்சிகள் உளவளத்துணையானது மனவடு அறிகுறிகளைக் குறைப்பதற்கு மற்றய அணுகுமுறைகளான ஆதரவு, திறன் பயிற்சி மற்றும் சிகிச்சைக்காக


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

காத்திருக்கும் நிலைகளைவிட கூடிய பயனுள்ளதாக இருந்ததாக கூறுகின்றன.

**முக்கிய சொற்பதங்கள்:** கள ஆராய்ச்சிகள், உளவளத்துணை, பாலியல் வன்முறை, டிபேரியா

---

**சமுதாய மனவடுவிற்குப் பின்னான காலத்தில் திட்டமிடல் தேவைகளும், சேவைகளும்: நாங்கள் PTSD அறிகுறிகளைக் கட்டாயம் பார்க்க வேண்டுமா?**

2004ம் ஆண்டு, மார்ச் மாதம் 11ம் திகதி மாட்றிட்டில் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குப் பின்னர், அரசியல்வாதிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், கல்வியியலாளர்களுக்கும் இடையேயான ஊடாட்டமானது சமுதாய வடுவிற்கான ஒரு சூழலை ஏற்படுத்தியது. இந்தக் கட்டுரையாளர்கள், அந்தத் தாக்குதல் நடந்து முடிந்து 18 தொடக்கம் 25 நாட்களுக்கிடையேயான காலப் பகுதியிலே, மாட்றிட் மக்களிடையே ஒரு மாதிரியைத் தெரிவுசெய்து (n=503), அந்தத் தாக்குதல் தொடர்பாகப் பெற்ற தகவல்களை ஆராய்ந்துள்ளார்கள். பொதுமக்களின்மீது மனவடுவை ஏற்படுத்தும் நிகழ்வுகளின் தாக்கமானது, ஆய்வாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற அளவீடுகள், வரைவிலக்கணங்கள், நியமவரையறைகள் போன்றவற்றிலே பெருமளவில் தங்கியருக்கின்றன என்பதை இவர்களின் முடிவுகள் காட்டி நிற்கின்றன. PTSDயை வரையறை செய்வதில் ஏற்படுத்தப்பட்ட சிறிய மாற்றமானது, அங்கு காணப்பட்ட மனத்தாக்கத்தின் அளவிலே மிகப் பெரியதானதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. இது, பொதுமக்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட PTSD ஆய்வுகளின் பெறுபேறுகள் ஒன்றுடனொன்று அதிகளவில் விலகியிருப்பதனையும், முரண்படுவதனையும் விளங்கப்படுத்துவதில் உதவுகின்றது. சமுதாயவடுவை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளுடன் தொடர்பான பொதுசுகாதாரக் கொள்கை வகுப்புகளிலே இந்தப் பெறுபேறுகளின் பயன்பாடு பற்றியும் ஆராயப்பட்டிருக்கின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** PTSD, PCL-C, கடுமையான நெருக்கீட்டுக் கோளாறு, ஆபத்தான காரணிகள், நெருக்கீடு, பயங்கரவாதம்

---

**டாவோர் அகதிமுகாம்களில் உள்ள சிறுவர்களினதும் பெரியவர்களினதும் உளசமூக ஆதரவின் தரத்தை உயர்த்தல்.**

டாவோர் அகதிமுகாமிலுள்ள சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உளசமூக ஆதரவைக் கொடுக்கும் முகமாக UNICEF அதிக எண்ணிக்கையான ‘சிறுவர் சிநேக சூழலை’ அமைத்தள்ளது. இந்தக் கட்டுரை மாதிரி ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சி பற்றி விபரிக்கின்றது. பின்பு இவர்களுக்கு வேலையினூடாகவும் பயிற்சி வழங்கப்படும். இது ஊக்குவிப்பாளர்கள் சிறுவர்களுக்கு கொடுக்கும் ஆதரவின் தரத்தில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர் சிநேக சூழல், டாவோர், தண்டனை, IDP முகாம்கள்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**ஆயுத முரண்பாட்டுப்பிரதேசங்களில் சிறுவர்களுடனான உளசமூக பணிகளை மதிப்பீடு செய்வதற்கான பங்குபற்றலினூடான மதிப்பீட்டு முறைகள்**

இந்த கட்டுரைப்பகுதி ஆயுதமுரண்பாட்டால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான தலையீடுகளை பங்குபற்றலினூடாக கண்காணிப்பு, மதிப்பீடு செய்தலுக்கான பரீட்சார்த்த செயற்திட்டத்தின் அனுபவங்களை பகிர்கின்றது. இது இலங்கையின் கிழக்குப்பகுதியில் நடைபெற்ற செயற்திட்டங்களில் பரீட்சிக்கப்பட்ட கருவிகளின் எண்ணக்கருக்களையும், கோட்பாடுகளையும் அளிக்கை செய்கின்றது. அத்தோடு தகவல் சேகரிப்பின் பெறுமதியையும் திட்டமிடல், கண்காணித்தல் மதிப்பீடு செய்தலின் அனுமானங்கள் பற்றி சொல்வதோடு இந்த முறைகளைப் பாவிக்கும்பொழுது முகம்கொடுத்த முக்கிய சவால்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது

**முக்கிய சொற்பதங்கள்:** பாடசாலை நேரத்திற்குப்பின்னான விளையாட்டு நிலையம், மதிப்பீடு, கண்காணிப்பு, பங்குபற்றல்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.